
பக்கங்கள் 30

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 02 ஞாயிற்றுக்கிழமை 18.08.2024 | அதிர்வு 16

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று தேர்த் திருவிழா!



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின்

05▶



### சவால்களைக் கண்டு தப்பியோடிய

# சஜித்துக்கும் அநுரவுக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும்

### மக்களிடம் ரணில் கோரிக்கை

"அன்று காஸ் சிலிண்டர் விலை 6 ஆயிரத்து 800 ரூபாவுக்குச் சென்றபோது சஜித் பிரேமதாஸவும் அநுர குமார திஸாநாயக்கவும் எங்கே இருந்தார்கள்? அன்று சவால்களைக் கண்டு தப்பியோடிய சஜித்தும், அநுரவும் இன்று மக்களின் கஷ்டங்கள் பற்றி பேசுவது வேடிக்கையானது. இவர்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம், சல்காது மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது 'இயலும் ஸ்ரீலங்கா' தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

02▶



## ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

### வவுனியாவில் நேற்று பரபரப்பு



**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாவட்டத்தில் பத்திரிகையொன்றில் பணியாற்றும் ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாகமேலும்தெரியவருவதாவது,

கடந்த சில நாள்களாக வவுனியா ஊடக அமையம் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பாக முகநூலில் அவதூறு

C5▶




இந்தத் தேர்தல் களேபரங்களுக்கு மத்தியில் முக்கிய நிகழ்வு ஒன்றை நம்மில் பலர் மறந்து விட்டனர்.

அது ஜெனிவாவில் நடக்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்த கூட்டத் தொடராகும்.

வரும் செப்டம்பரில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் அதே சமயத்தில்தான் ஜெனிவாவில் 57 ஆவது அமர்வுக்காக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூடவிருக்கின்றது.

இலங்கையில் செப்டம்பர் 21 இல் ஜனாதிபதித் தேர்தல். ஆனால் ஜெனிவா அமர்வு

C5▶

# சஜித்துக்கும் அநுரவுக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும்





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் உரையாற்றுகையில், “கட்சிகளை உடைப்பதற்காக நாம் இன்று ஒன்றுகூடவில்லை. கட்சிகள் ஒன்றுகூடி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வந்துள்ளோம். எம்மை ஆசீர்வதிக்கவே மழையும் பெய்தது. அதனால் கட்சி பேதமின்றி சுயாதீனமாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்றேன்.

மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில், முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர். அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர்காலத்தைப் பாதுகாப்போம். என்னுடையதோ, பிரதமருடையதோ எதிர்காலம் இங்கு பாதுகாக்கப்படாது.

கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். காஸ் இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதையும் விற்றோம். மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹோட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஓடிவிட்டார். அநுரகுமாரவைத் தேடவே முடியவில்லை. டொலரின் பெறுமதி 370 ரூபாவாக உயர்ந்தது. காஸ் சிலிண்டர் ரூ.6,800 வரை அதிகரித்தது. பெற்றோல் ஒக்டேன்-92 இன் விலை ரூ.470 வரையில் அதிகரித்தது. ஒட்டோ டீசல் ரூ.460 வரையில் அதிகரித்தது. மண்ணெண்ணெய் விலை ரூ.460 வரையில் அதிகரித்தது. பஸ் கட்டணமும் மின் கட்டணமும் அதிகரித்தது. மக்கள் கடுமையாகத் துன்பப்பட்டனர். அப்போது சஜித்தும், அநுரவும் எங்கு இருந்தனர்?

மக்கள் கஷ்டம் புரிந்திருந்தால் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும். எதிர்க்கட்சி எந்த வேளையிலும் அரசைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டாம் எதிர்க்கட்சி ஏற்க வேண்டும். அவர்கள் எங்கு இருந்தனர்? காஸ் சிலிண்டர் விலை ரூ.4,900 இற்கு கூடியபோது அநுர, சஜித் எங்கு இருந்தனர்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

இன்று அநுராதபுரத்தில் ஆரம்பித்து சஜித், அநுரவிடம் இந்தக் கேள்விகளை எல்லா மேடைகளிலும் கேட்பேன். பதில் இருந்தால் கூறுங்கள், இல்லாவிட்டால் எனது மேடையில் இரு பக்கங்களில் வந்து அமருங்கள்.

அன்று உயர்வடைந்த காஸ் சிலிண்டர் விலை இன்று குறைந்துள்ளது. அதனால் சிலிண்டர் சின்னத்தை ஏற்றுக்கொண்டேன். பெற்றோல் டீசல் விலைகளையும் குறைத்துள்ளோம். பஸ் கட்டணமும் மின் கட்டணமும் குறைந்துள்ளன. இதனால் மட்டும் திருப்தியடைய முடியாது. இது ஆரம்பம் மட்டுமே. இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. நாட்டில் உரம் இருக்கவேயில்லை. இந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சஜித்தோ, அநுரவோ, ஹர்ஷவோ, ஹந்துன்னெத்தியோ அன்று முன்வரவில்லை. நான் உரம் பெற்றுத் தந்தேன், நீங்கள் விளைச்சலைத் தந்தீர்கள், நாம் வெற்றியடைந்தோம்.

இதற்கு மக்களுக்கு நன்றி! நான் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவேன். வற் வரி அதிகரிக்கப்பட்டபோது மக்கள் பட்ட கஷ்டங்களை நான் அறிவேன். கஷ்டப்பட்ட அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கினோம். அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 55 ஆயிரம் வரையில் அதிகரித்தோம். வங்குரோத்து நாட்டிலேயே அதனைச் செய்தோம்.

அஸ்வெசும வழங்கினோம், சமுர்த்தி போன்று மூன்று மடங்கு வழங்கினோம். சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிவாரணம் வழங்கினோம். அங்கவீனமுற்றோருக்கு நிவாரணம் வழங்கினோம். ஜனாதிபதி நிதியத்தில் புலமைப்பரிசில் வழங்கினோம். உறுமய திட்டத்தில் காணி உறுதிகள் வழங்கினோம். தற்காலிகமான உறுமய திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் பின்னர் தனி அதிகார சபையின் கீழ் இரு வருடங்களில் இந்தத் திட்டத்தை நடத்தி முடிப்போம், அதற்கான சட்டமும் கொண்டு வரப்படும். கொழும்பில் வீட்டு உரிமைகளை மக்களுக்கு வழங்குகின்றோம். தோட்டப் பகுதிகளைக் கிராமங்களாகப் பிரகடனப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

உரிமைகளைப் பகிர்வதே புரட்சியாகும். 18 நாடுகள் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக உதவிகளை வழங்கின. நாம் முன்னேற்றத்தை எட்டினால் சர்வதேச நாணய நிதியம் 13 பில்லியன் டொலர் நிவாரணம் வழங்குவதாகக் கூறியுள்ளது. எனவே அதற்கான வேலைத்திட்டத்தை தொடர வேண்டும். அநுரவும் சஜித்தும் அதனை மாற்றுவதாகக் கூறுகின்றார்கள். அதனை மாற்றிவிட்டு மீண்டும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்து மின்சாரம் இன்றி இருக்க வேண்டுமா? இல்லாவிட்டால் அப்படியான பிரச்சினைகள் வரும்போது அதனைத் தீர்மானிக்க முடியாமல் ஓடிவிடுவார்களா?

நான்கு வருடங்கள் தொழில் கிடைக்காத இளையோருக்கு தொழில் வழங்கும் திட்டமும் எம்மிடம் உள்ளது. அதற்காக விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் ஆரம்பிக்கப்படும், தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும். ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் கலாசார முக்கோணத்தை அமைத்து தம்புள்ளை, சீகிரிய பகுதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தினோம். அதேபோல் அநுராதபுரத்தை மேம்படுத்த எதிர்பார்க்கின்றோம். அநுராதபுரத்தை பௌத்த மத்தியஸ்தானமாக மாற்றியமைக்க எதிர்பார்க்கின்றோம். அதற்காக மகா விகாரை பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும்.


நாம் முன்னேறிச் செல்வோம். உங்கள் எதிர்காலத்தை எம்மிடம் விட்டுவிடுங்கள், காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள்.” - என்றார்.

ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# தேர்தலுக்காக வாரி வழங்கப்பட்ட சகல பெர்மிட்டுகளும் இரத்தாகும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு







"விசா வழங்கல் நடைமுறை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பானை கொடுக்கல் வாங்கல்களினூடாக, திருடப்பட்ட பணத்தைக் கொண்டு வயிற்றை நிரப்புகின்ற சிலர் அதனை அரசியலைச் செய்வதற்காக பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பண்டாரகம நகரில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தெளிவான வேலைத் திட்டங்கள் இருக்க அவசியமாகும்.

அரசாங்கத்துக்குள் 24 மணித்தியாலங்களும், 365 நாள்களும், திருட்டை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் கீழிருந்து மேல் வரை செல்கின்றன.

ஊழலும் மோசடிகளும் திருட்டுத் தனமும் நாட்டில் காணப்படுகின்றன. இன்று பல தரப்பினர் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் போன்ற வரப்பிரசாதங்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில், மோசடியாகவும் கையூட்டாகவும் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரங்களும் இரத்து செய்யப்படும்.

அரசியல் லஞ்சத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சட்டத்தின் முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, அவ்வாறான தவறுகளைச் செய்யாமல் சிந்தித்துச் செயல்படுங்கள்."

– என்றார்.





# தேர்தல் பிரசாரச் செலவுகளை கண்காணிக்க இணையத்தளம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசாரச் செலவுகளைக் கண்காணிக்கும் வகையில் இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்திற்கு “வோட் மணி மீற்றர்“ எனப் பெயரிடப்பட்டுள்ளது.




இந்த இணையத்தளத்தின் அங்குரார்ப்பண விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த இணையத்தளம் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் மற்றும் பவ்ரல் அமைப்பு உள்ளிட்ட ஆறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளினால் உருவாக்கப்பட்டுள்ளது.



# வீதியைக் குறுக்கே கடந்த சிறுவன் வான் மோதியதில் பரிதாப மரணம்!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு. வாகரை பிரதான வீதியிலுள்ள பனிச்சங்கேணி பாலத்தில் வீதியைக் குறுக்கே கடந்த சிறுவன் மீது வான் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று வாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





வாழைச்சேனை, மீராவோடையைச் சேர்ந்த 8 வயதுடைய சப்பிறா மாஹீர் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரைப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது!

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்வெட்டித்துறையில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஐந்து வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வன்முறைக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மீட்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவுக்கமைய யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற 6 பேர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் மூன்று இலட்சம் வரையான பொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக 19 மற்றும் 23 வயதான கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 2 பேரும், அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசாரணையின்போது டுபாயில் இருந்து வீட்டைத் தாக்க உத்தரவு கிடைத்தது எனவும், அதற்கமைய கூலிப்படையாக குறித்த வன்முறையில் கைதானவர்கள் ஈடுபட்டனர் எனவும் தெரியவந்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

தேர்தலுக்கு 12 நாள்களுக்கு முன்பு செப்டம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகி விடும். ஒக்டோபர் 11 ஆம் திகதி வரை அது நீடிக்கும்.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அவதானிப்பு அறிக்கை ஜெனிவாவில் 57ஆவது கூட்டத் தொடரின் ஆரம்பத்திலேயே வெளியாகிவிடும்.

அதன்படி, இங்கு தேர்தலுக்கு 12 நாள்களுக்கு முன்னர் அது வெளியாகி நாட்டின் நிலைமை சந்தி சிரிக்கும் விவகாரமாகும் என்று எதிர்பார்க்கலாம்.

தேர்தல் உச்சக்கட்ட பிரசாரத்தில் இருக்கும்போது இந்த அறிக்கை வெளியாகி தேர்தல் மேடைகளை இன்னும் சூடாக்கும்.

இலங்கை தொடர்பாக 2021 இல் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்த செப்டெம்பரில் பூர்த்தியாவதால் இனி வரப் போகும் அமர்வில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை ஒன்று தீர்மானமாக முடிவெடுப்பதற்காக இணை அனுசரணை நாடுகளினால் வழமை போல முன்வைக்கப்படும்.

அதற்கான கலந்துரையாடல்கள், நாடுகளுக்கு இடையிலான கருத்துப் பரிமாறல்கள் போன்றவை செப்டம்பர் மாத இறுதியில் உச்சம் பெறும். ஒக்டோபர் 7 ஆம் திகதி இலங்கை விவகாரம் பெரும்பாலும் விவாதத்துக்கு வரும்.

ஆக, செப்டம்பர் 21 தேர்தலை அடுத்து தெரிவாகும் இலங்கையின் புதிய ஜனாதிபதி, தாம் பதவியேற்ற கையோடு கையாள வேண்டிய சூடான சர்வதேச விவகாரமாக ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வு அமையும் என்பது திண்ணம்.

புதிய அதிபருக்கு அவரது ஆட்சிக் கட்டை அவர் கொண்டு நடத்துவதற்கான முதல் விஷப் பரீட்சையாக அது இருக்கும் என்பதும் உண்மை.

**வவுனியாவில்...**

பரப்பி வரும் சம்பவம் தொடர்பாக சுமுகமான தீர்வு ஒன்றை எட்டுவதற்காக வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தால் குடியிருப்பு பூங்காவில் பொதுக்கூட்டம் நேற்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் அவதூறு பரப்பிய நபரும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றபோது திடீரென உணர்ச்சிவசப்பட்ட தொலைக்காட்சிகளுக்குப் பணியாற்றும் நபர், பத்திரிகையொன்றின் ஊடகவியலாளர் மீது ஹெல்மெட் கொண்டு தாக்குதல் நடத்தியதில் அந்தப் பத்திரிகையின் ஊடகவியலாளர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி நபர் அங்கிருந்த பெண் ஊடகவியலாளரையும் தள்ளி வீழ்த்தியதுடன் அவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ள முயன்ற வேளையில் அருகில் இருந்த ஊடகவியலாளர்களால் தடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட நபரே ஊடகவியலாளர் மீதும் வவுனியா ஊடக அமையம் மீதும் முகநூலில் அவதூறு பரப்பியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**செல்வச்சந்நிதியானுக்கு...**

வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில், நேற்று இரவு சப்பரத் திருவிழா நடைபெற்றது. இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

நாளை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், மாலை 6. 30 மணிக்கு மௌனத் திருவிழாவுடன் வருடாந்தப் பெருந்திருவிழா நிறைவுறும்.

இதேநேரம், தேர், தீர்த்தத் திருவிழாக்களையொட்டி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், சுகாதார, குடிதண்ணீர் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நாட்களில் சந்நிதியான் ஆலயத்துக்கு அண்மையாகவுள்ள 20 மடங்களில் அன்னதானமும் நடைபெறும்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொருளாதாரப் பின்னடைவு

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட இலங்கை நாட்டை பிணையெடுத்து மீட்பதற்கு உதவ முன்வந்தது சர்வதேச நாணய நிதியம்.

அதன் உதவி, ஒத்தாசை மூலம் இலங்கை சற்று மூச்சு விட்டு மீண்டெழத் தொடங்கிய சமயத்தில் - கடந்த வருடத்தில் - பொருளாதார நிபுணரும், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருமான இந்திரஜித் குமாரசுவாமி ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டி இருந்தார்.

“இலங்கையில் அடுத்த வருடத்தில் (2024 இல்) தேர்தல் வருகின்றது. இப்போது மீட்சி, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியின் பாதையில் அடி எடுத்து வைத்திருக்கும் இலங்கையின் போக்கு, அதன் தற்போதைய செல்நெறியில் இருந்து தேர்தல்களினால் திசை திரும்பி விடும் ஆபத்து உண்டு. அப்படி தேர்தல் காரணமாக இலங்கையின் பாதையை திசை திருப்ப அனுமதித்தால் நாடு முன்பிருந்ததை விட மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்” - என்று எச்சரித்திருந்தார் இந்திரஜித் குமாரசுவாமி.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவி திட்டங்களைப் பெறுவது இது முதல் தடவை அல்ல.

இலங்கை ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இது போன்ற பதினாறு உதவித் திட்டங்களை பெற்றுச் செயல்படுத்தி இருக்கின்றது.

அந்தப் பதினாறு திட்டங்களும் ஆரம்பத்தில் சரியான வழியில் - பாதையில் - முன்னேற்றம் கண்டன என்பதுதான் சரித்திரம்.

ஆனால், அந்த முன்னேற்ற சமயங்களில் எல்லாம் இடையில் தேர்தல்கள் வந்ததும் அவை குழம்பிப் போயின என்பதுதான் கடைசியில் வரலாறாய் அமைந்துள்ளது.

தேர்தல் வெற்றிக்காகப் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளைக் குழப்பி, மக்கள் செல்வாக்கையும் ஆதரவையும் திரட்டும் குறுகிய போக்குடைய கொள்கை முடிவுகளை அரசியல் தலைமைகள் எடுக்கும். அதனால் நிதி இழப்புக்களும், பொருளாதாரச் சரிவுகளும் ஏற்பட்டமைதான் இலங்கையின் அனுபவம் என்பதை வெளிப்படையாக கடந்த வருடமே சுட்டிக் காட்டி இருந்தார் இந்திரஜித் குமாரசுவாமி.

இந்த வருடம் தேர்தல் வரும் போது அத்தகைய போக்கை கடைபிடிப்பது இதுவரை மீட்டெடுத்த பொருளாதார முயற்சிகளையும் பாதிப்புக்கு உள்ளாக்கி விடும்.

“ஒவ்வொரு முறையும் தேர்தல் நடக்கும் போதும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் ஒழுக்கமற்றனவாக மாறி விடுகின்றன. சர்வதேச நிதியத்தின் தற்போதைய உதவி திட்டத்துக்கு முன்பான 16 உதவி திட்டங்களிலும் பலவற்றிலும் நாம் ஆரம்பத்தில் இப்போது நிலைப்படுத்திய முன்னேற்றங்களை போன்ற மேம்பாட்டைக் கண்டோம். ஆனால் தேர்தல் நெருங்கும் போது எல்லாமே தலைகீழாகி விடுகின்றன” - என்று கடந்த ஆண்டிலேயே நாட்டின் பட்டறிவுப் பாடத்தை - அனுபவத்தை - எச்சரிக்கையாக நினைவு கூர்ந்து எடுத்துரைத்திருந்தார் அவர்.

அந்தச் சறுக்கல்கள் தற்போதைய தேர்தலை ஒட்டியும் நடக்கக்கூடாது, நடக்க அனுமதிக்கக் கூடாது என அவர் உட்பட பலரும் கொழும்புக்கு அறிவுறுத்தி இருந்தனர்.

ஆனால், ரணில் அரசின் குளறுபடி நடவடிக்கைகள், எச்சரிக்கப்பட்ட அந்தத் திசையில்தான் நாட்டையும் அதன் பொருளாதாரப் போக்கையும் நெறிப்படுத்திச் செல்கின்றன என்பது ஓரளவுக்கு வெளிப்படையாக தெரியத் தொடங்கி இருக்கின்றது.

தனது பக்கம் ஆதரவு தர இணங்கிய எம்.பிக்களுக்கு எல்லாம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் கீழான நேரடி உதவிகள் என்ற பெயரில் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் மூலம் குழப்பகரமான செய்கைப் போக்கு ஒன்றை இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தி நிற்கின்றார் என்பது அப்பட்டமானது.

இப்படிக் கண்மூடித்தனமாக பெருந்தொகை பணத்தை நின்று, நிலைத்து, நீடிக்கும் திட்டங்கள் அல்லாத அற்ப விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்வது புத்திசாலித்தனமானது அல்ல. பொருளாதாரத்தை மேம்படுத்த அது உதவப் போவதுமில்லை.

இப்படித் தூர நோக்கற்ற செயற்பாடுகளுக்கு நாட்டின் நிதி நிலைமையை கவனிக்காமல் பணத்தை வாரி இறைப்பது மீண்டும் நாட்டுக்குப் பொருளாதார பின்னடைவை வேண்டித் தரும்.



# மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று மாலை 4 மணிவரை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அலி சாஹிர் மௌலானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கடிதம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பரினால் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் உயர்பீடக் குழுக் கூட்டத்தில், நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டமையினால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# காலியில் 191 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

காலி – நெலுவ பகுதியில் 191.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. இதுவே கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகள மழை வீழ்ச்சி பதிவான இடமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுத்துறை – வலல்லாவிட்ட பகுதியில் 177 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் களுத்துறை – ஹொரணைப் பகுதியில் 120 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவானது,

இந்தக் காலப் பகுதியில் கொழும்பில் 116.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எஹெலியகொடையில் 116 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் காலி – உடுகமையில் 115.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

வளிமண்டல தாழ்வு பகுதியில் நிலவும் தளம்பல் நிலைமையே பலத்த மழைவீழ்ச்சி பதிவாக காரணமென வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்ககூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாணகங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமாக மழை பெய்யகூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன் இடிமின்னல் தாக்கமும் ஏற்படுவதால் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.



# தொண்டைமானாறு சந்நிதி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று!

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 6. 30மணிக்கு மௌனத் திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவுறும்.

மறுநாள் 20 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை தொண்டர் விழா பூஜை நடைபெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு விசேட போக்குவரத்து, குடிதண்ணீர், பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தினங்களில் சந்நிதி சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் உட்பட சுமார 20 மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

# இன்று நல்லூரில் மஞ்சம்

## நல்லூரரான் மஞ்சம் நாளுமே இன்பம்!

மஞ்சத்தில் ஏறி மால்மருகன் வருகிறான்
வாருங்கள் முருகன் வடிவழகைக் காண
சஞ்சல மகற்றி சாந்தியை அளித்திடுவான்
சகலரும் வாருங்கள் சரவணனைத் தரிசிப்போம்

நெஞ்சமதில் இருக்கும் அத்தனையும் சொல்லுங்கள்
நிம்மதியை நீள்சுகத்தை நல்லூரான் தந்திடுவான்
வந்தவினை அகலும் வருவினைகள் ஓடிவிடும்
செந்திருவாம் கந்தனைத் தரிசிப்போம் வாருங்கள்!

பேராசை என்னும் பேய் பிடிக்காதிருக்க
பிறர் வருந்தும் காரியங்கள் ஆற்றாதிருக்க
காவலனாய் கந்தா நீயிருக்க வேண்டும்
கைகூப்பிக் கேட்கின்றோம் காத்திடுவாய் கந்தா!

அரக்க மனமுடையாரைத் திருத்திவிடு கந்தா
அறவழியில் செல்ல ஆக்கிவிடு கந்தா
இரக்கமுடை மனத்தை இருத்திவிடு கந்தா
இவ்வுலகில் என்றும் துணை நீயே கந்தா!

செருக்குடைய அசுரரை திருந்திடவே வைத்தாய்
சித்தமதை தெளிவாக ஆக்கிவிடு கந்தா
உருக்கமுடன் உனைவேண்டி நிற்கின்ற அடியார்
உளமகிழச் செய்திடுவாய் உமைபாலா கந்தா!

நல்லூரான் மஞ்சம் நாளுமே இன்பம்
எல்லையில்லா கருணை கந்தனது மஞ்சம்
அழகுடனே கந்தன் அமர்ந்துவரும் காட்சி
ஆனந்தம் ஆனந்தம் அளவில்லா ஆனந்தம்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ண், ஆஸ்திரேலியா.**



# ஜனாதிபதித் தேர்தலால் பிளவுபடப் போகிறதா தமிழரசுக் கட்சி?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தேசியப்பட்டியல் விவகாரத்தோடு நிலைகுலைந்து காணப்படுகின்ற தமிழரசுக்கட்சி, வலிமையான தலைமையின்மையால் தொடர்ந்து பல விடயங்களில் பின்னடைவையும், உள்கட்சி முரண்பாட்டையும், அதை ஒட்டி வெளியிலே பூதாகரமாகக் கருத்து வெளியிடும் நிலைமையையும் சந்தித்து நிற்கின்றது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தலைவர் தேர்தலோடு இரண்டு அணிகளாக வெளிப்படையாகவே செயல்படத் தொடங்கிவிட்டது அது. நீதிமன்ற விவகாரத்தோடு மேலும் அணிகள் தங்களுக்குள் வலிமைப்படுத்திக் கொண்டன. ஆனாலும் வழக்குகளில் இருந்து ஓரளவுக்கு சுமுகமான நிலையை எட்டக்கூடிய வகையில் கட்சியிலே ஓர் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுருக்கின்ற சூழலில் ஜனாதிபதித் தேர்தல் வந்துள்ளது. இதில் யாரை ஆதரிப்பது என்கின்ற கருத்து முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரித்துப் பரப்புரை மேற்கொண்டு, பிற்காலத்தில் ஆட்சி அதிகாரத்தோடு ஒன்றிணைந்து, நிழல் அமைச்சர்களாகவும், தீர்மானிப்பவர்களாகவும் இருந்து, தமது நலன்களை நிறைவேற்றிக் கொண்டமையைத் தவிர தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமான எதனையும் அக்கட்சி செய்யவில்லை எனும் விமர்சனமும் உண்டு.

தற்போது ஜனாதிபதியாக உள்ள ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா? எதிர்க்கட்சித் தலைவராக உள்ள சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதா? அல்லது தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரிப்பதா? – எனும் கேள்வி உள்கட்சிக்குள்ளும் அங்கத்தவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் பேசு பொருளாக காணப்படுகிறது.

இதில் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய முன்னாள் ஆயுதக் குழுக்களுக்களும், விக்னேஸ்வரனின் கட்சியும் பொது வேட்பாளரை ஆதரிக்கின்ற போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



வி.எஸ்.சிவகரன்

வழமை போன்று பகிஷ்கரிப்பில் ஈடுபடுகிறது.

தமிழ் மக்களின் பிரதான கட்சியாகவும் வடக்கு, கிழக்கிலே கட்டமைப்பு ரீதியாகப் பலமான கட்சியாகவும் உள்ள தமிழரசுக் கட்சி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. ஒரு மாதத்தில் இரண்டாவது மத்திய குழுக் கூட்டத்தை கூட்ட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அது உள்ளாகியுள்ளது.

ஆனாலும் இன்று நடைபெறும் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் கூட எவருக்கு ஆதரவு என்கின்ற நிலைப்பாட்டில் தீர்மானம் எடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவரட்டும், அதன் பின்னர்

தொடர்ச்சி▼

# ஜனாதிபதித் தேர்தலால் பிளவுபடப் போகிறதா தமிழரசுக் கட்சி?


தொடர்ச்சி▲

தீர்மானத்திற்கு வரலாம் எனக் கூடிக் கலையக் கூடிய நிலைமைதான் ஏற்படும். ஏனெனில் கடந்த வாரம் நடைபெற்ற மத்திய குழு கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் இணைந்த வடக்கு, கிழக்கில் சுயாட்சி அதிகாரம் உள்ள அதிகார பகிர்வை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்புகுத்தும் கட்சியோடு உரையாடலாம் அல்லது ஆதரிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அது சாத்தியமற்ற ஒன்று என்பது எல்லோருக்கும் நன்கு புரியும். இக்கோரிக்கை பொது வேட்பாளரை ஆதரிக்க கூடிய தரப்பில் இருந்து விதைக்கப்பட்டுள்ளது. ஆகவே இக்கோரிக்கையின் பிரகாரம் எந்தத் தென்னிலங்கை வேட்பாளரும் இதனைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிட மாட்டார்கள், அதனால் இலகுவாக பொது வேட்பாளரை நோக்கிக் கட்சியை நகர்த்தி விடலாம் என அவர்கள் மிகத் தந்திரமாகக் காய் நகர்த்தியுள்ளார்கள் என்றே தோன்றுகிறது.

இதில் சஜித் பிரேமதாஸ தரப்பை ஆதரிக்கக் கூடிய வாய்ப்பு உண்டென சுமந்திரன் அணியினர் எதிர்பார்க்கின்ற சூழலில், அதனை எப்படி அந்த அணி கையாளப்போகிறது என்ற கேள்வி உள்ளது. கட்சியின் மத்திய குழுவில் தமக்கே பெரும்பான்மை ஆதரவு இருக்கிறது என கூறும் அந்த அணி, இந்த விடயத்தில் எவ்வாறான முடிவை நோக்கி நகர்த்தப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த முடிவு அடுத்த தலைமைக்கான உள்கட்சி தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஏலவே பிளவுபட்டுள்ள உள்கட்சி விவகாரங்களால் பொது வேட்பாளரா? சஜித் பிரேமதாசாவா? யாரை ஆதரிப்பது என்பதிலேயே கட்சிக்குள் பாரிய முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அல்லது பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்த சீ.வி.கே.சிவஞானம் போன்றவர்கள் தற்போது கூறுவது போல் எந்த



வேட்பாளரையும் ஆதரிக்காமல் நடுநிலைமையாக இருந்து விடலாம் எனும் யோசனையும் முன்வைக்க படலாம் எனக் கூறப்படுகிறது. அது ஒரு கட்சிக்கு முறையல்ல. அதுவும் தமிழ் மக்களின் பிரதான கட்சி தமிழ் மக்கள் தீர்மானத்தை எடுக்க கூடிய வகையில் அவர்களை வழிகாட்ட வேண்டியது ஒரு பொறுப்புடைய கட்சி என்ற முறையில் அதன் கடப்பாடாக இருக்க வேண்டும்.

நழுவி போவதோ அல்லது தீர்மானம் எடுக்க தயங்குவதோ அந்தக் கட்சி மீது தொண்டர்களுக்கு வெறுப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பை உண்டு பண்ணும். சரியோ, தவறோ அவர்கள் தீர்க்கமான தீர்மானம் ஒன்றை எடுத்தேயாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் உள்ளாகுவார்கள். சில தூதரகங்களும் அதனை நோக்கி நகர்த்தக் கூடிய வாய்ப்பு உண்டு.

தேர்தலை அண்மிக்கும் போதே இதற்கான பதிலை அவர்கள் வழமை போன்றே கூறி விடுவார்கள். ஆனாலும் இரண்டு அணிகளும் தீர்மானங்களில் மாறுபட்டு நிற்பதனால் முரண்பாடு அதிகரிக்கவே வாய்ப்பு உண்டு. பொது வேட்பாளரை ஆதரிக்கும் தரப்பு சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தரப்பை துரோகியென முத்திரை குத்தவும் சந்தர்ப்பம் உண்டு.

ஏனெனில் பொது வேட்பாளரை ஆதரிப்பவர்கள் தியாகிகள் என்னும் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தி உள்ளனர். தொடர்ந்து அதனை தக்க வைக்க முனைவார்கள். இவ்வாறான முரண்பாடுகள் வாக்காளர்கள் மத்தியிலே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும்.

இதற்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அபிவிருத்திக்கென நிதி, மதுபான சாலைக்கான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களின் நிலைமையும் கவலைக்குரியதே. பொது வேட்பாளரை ஆதரிக்க கூடிய கட்சிகளில் சில மீனுக்கு தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டும் நிலையிலேயே உள்ளன. அதில் உள்ளவர்கள் எல்லோரும் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தொடர்ந்து நின்று, நீடித்து, நிலைப்பார்களா எனும் கேள்விகள் உண்டு.

எவருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாத தமிழரசுக்கட்சி எப்படி இந்த விடயத்தைத் தந்திரமாகக் கையாண்டு தமது அங்கத்தவர்களை ஒருமித்த நிலைப்பாடுக்குட்படுத்தப்போகிறது என்பதே பெரிய எதிர்பார்ப்பு!


இதில் இந்திய தூதரகமும் இரட்டை வேடம் போடுவதாகவே அறிய முடிகிறது. ஒரு தரப்பு பொது வேட்பாளரோடும், இன்னொரு தரப்பு சஜித்தை ஆதரிக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டோடும் அணுகுவதாகவே கூறப்படுகிறது. இதில் நெருக்கடியை சந்திக்க போவது சுமந்திரனே. ஏனெனில் ஆரம்பத்தில் இருந்தே பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்து வந்தவர். தமிழ்த் தேசியக்கோட்பாட்டு சித்தாந்தத்துக்கு மாறாக தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்கும் போது தமிழ் மக்கள் நலன் சார்ந்து வலிமையான நோக்கு நிலையை உத்தரவாதத்தை அதன் மீதான நம்பிக்கைத்தன்மையை ஏற்படுத்தக் கூடிய வகையில் அவர்களின் ஒப்புதலை எப்படி பெறப்போகிறார்? அப்படி ஒப்புதல் தந்தாலும் கடந்த காலங்களைப் போல் காலாவதி ஆக்கி விட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? 2015 தேர்தல் நல்ல முன்னுதாரணம். நிலைமையை எப்படி கையாள போகிறார்?

இதற்குள் அக்கட்சியில் உள்ள மற்றும் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியும் பொது வேட்பாளர் கனவில் இருந்தார். அது கானல் ஆகியதால் அவரை ஆதரிக்கக்

தொடர்ச்சி▼

# ஜனாதிபதித் தேர்தலால் பிளவுபடப் போகிறதா தமிழரசுக் கட்சி?





தொடர்ச்சி▲

கூடிய அணியும் குழப்பத்தில் இருப்பதாகவே அறிய முடிகிறது.

ஆகவே இப்போது மூன்றாவது அணியும் யாழில் ஒன்று கூடி பேசி இருப்பதாகவே தகவல்கள் கிடைக்கின்றன. தமிழரசுக்கட்சியில் மூத்த செயற்பாட்டு உறுப்பினர் தான் அனுரவுக்கு வாக்களிக்க உள்ளார் எனக் கூறுகிறார். சில வேளைகளில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த மறுநாள் நாடாளுமன்றம் கலைக்கப்படக் கூடிய வாய்ப்பு உண்டு. அவ்வாறு கலைக்கப்பட்டால் இவர்கள் எப்படி ஒருமித்த நிலைப்பாட்டில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கப் போகிறார்கள்? கட்சிக்குள்ளேயே பல அணிகள் தோன்றி விட்டன. ஏனைய ஆயுதக் குழுக்கள் ஒன்றாகி நிற்கின்றன. ஆகவே தமிழ் தேசியம் பேசும் தரப்புகள் மூன்று தரப்பாக தேர்தலை எதிர்கொள்கின்றபோது கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட மிக மோசமான பின்னடைவை மூன்று தரப்பும் எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படும்.

தமிழரசுக் கட்சிக்குள்ளும் ஒருவரை ஒருவர் வெற்றி பெற விடாமல் காய் நகர்த்துவார்கள். தொண்டர்களின் ஒருமித்த ஐக்கியம் ஏற்படாத எந்தக் கட்சியும் களப்பணியைச் சரியாக ஆற்ற முடியாது.

இவற்றை உற்று நோக்குகின்ற போது தமிழரசுக் கட்சிக்குள் இருந்து இரண்டு அணிகளாக ஓர் அணி பொது வேட்பாளரையும், இன்னொரு அணி தென்னிலங்கை வேட்பாளரையும் ஆதரிக்கக் கூடிய நிலை ஏற்பட்டு விடுமோ என எண்ணத் தோன்றுகிறது.

இப்படித்தான் 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்த போதும் கட்சிக்குள் இருந்து சிலர் ஆதரிக்கக் கூடாது என வெளிப்படையாக ஊடக சந்திப்பை நடத்தியமையால் தென்னிலங்கை வேட்பாளர்களை திருப்திப்படுத்துவதற்காக கட்சியில் உள்ள சிலரை இடைநிறுத்தினார்கள். ஆனால் இவர்கள் கம்பெரலியாவோடு காணாமல் போனார்கள். தமிழ் மக்களுக்கு எதுவுமில்லை.

தமிழ்த் தலைமைகள் எப்பொழுதும் அறிவுபூர்வமாக நின்று, நிதானித்து, நீடித்து நிலைக்கக் கூடிய எந்தத் தீர்மானத்தையும் வலிமையாக இதுவரை ஆக்கியதில்லை. உணர்ச்சிவச எண்ணங்களோடு அரசியலை அனுகுவதால் வாக்காளர்களை வாக்களிக்கும் இயந்திரமாகவே 2015 ஆம் ஆண்டு வரை எண்ணியிருந்தனர்.

அதற்குப்வ்பின்னர் தென்னிலங்கையோடு தலைவர்கள் ஏற்படுத்திய இணக்க அரசியல் கண்டு, வாக்காளர்களும் இணக்கத்தை ஏற்படுத்தி விட்டனர். ஆகவே இப்பொழுது கட்சியும் சீர் கெட்டு கிடக்கிறது. கூட்டுக்களும் ஒழுங்கற்றுப் போய் விட்டன.

இவ்வாறான பலவீனமானகள யதார்த்தத்தோடு கட்சி ஒருங்கிணைவற்ற சூழ்நிலையை எதிர்கொள்வது எப்படி? எவரை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டிற்கு எப்படி வர முடியும்?

சிறிதரனின் ஆசீர்வாதத்தோடுதான் அரியநேந்திரன் வேட்பாளராகியிருக்க முடியும். இதில் சிறிதரன் அணி வெளிப்படையாகவே பொது வேட்பாளரை ஆதரிப்பதால் கட்சி எந்த அணிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போகிறது? எதிர்கும் சுமந்திரன் அணிக்கா? ஆதரிக்கும் சிறிதரன் அணிக்கா? இரண்டு தரப்பிற்குமே நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்பு மிகவும் குறைவு.

இவர்களின் முரண்பாட்டை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் ஆயுத குழுக்களின் கூட்டும் உள்ளூற இரசிக்கும். வரும் தேர்தலில் தாம் பலம் பெற முடியும் என கனவு காணும். தென்னிலங்கையும் மகிழும். தமிழரசு கட்சியின் உள்ளக முரண்பாடு அந்தக் கட்சியை மட்டுமல்லாமல் தமிழினத்தையும் பாதிக்கும் என்பதை அதன் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

பதவிச் சண்டைக்குள் மூழ்கி இருப்பதால் இன விடுதலை பற்றிய தூரநோக்குப் பார்வையின்றி சுயநலத்தையே வெளிப்படுத்துகின்றனர்.

தமிழர்களின் வரலாறு முழுக்க இதுவே தொடர்ச்சியாக நீள்கிறது. யாரை நொந்து கொள்வது? இந்த இனத்தை காப்பது யார்?



# ரணிலின் தந்திரங்களைத் தாண்டி முன்னிலையில் ஓடும் சஜித்!



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதித் தேர்தல் கால குதிரை ஓட்டம் சூடு பிடித்திருக்கின்றது. தேர்தல் முடியும் வரையில் யார் எந்தப் பக்கம் தாவுவார்கள் என்பதை கண்காணிப்பதே கட்சிகளுக்கு பெரும் தலைவலியாகிவிட்டது. தற்போது அதிகாரத்திலுள்ள ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவை நோக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் திரட்சி எதிர்பார்க்கப்பட்ட அளவினைக் காட்டிலும் அதிகளவு நிகழ்ந்து வருகின்றது.

ஏற்கனவே, ராஜபக்ஷக்களின் கட்சியான பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலோடு சங்கமித்துவிட்டார்கள். முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் சஜித் பிரேமதாஸவோடு இருக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ரணில் பக்கம் சென்றுவிட்டார்கள். இவ்வாறான அச்சுறுத்தலை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களும் எதிர்கொள்கிறார்கள். ஏற்கனவே, மனோ கணேசனின் கட்சியைச் சேர்ந்த வேலுகுமார் ரணில் பக்கம் ஓடிவிட்டார். இந்தத் தாவல் படலம் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று தங்களை முன்னிறுத்தும் கட்சிகளின் உறுப்பினர்கள் வரையில் பரவும் வாய்ப்புக்களைக் காண முடிகின்றது. அதிலும், ரணிலுடனான கட்சி ரீதியான உரையாடல்கள், தனிப்பட்ட உரையாடல்கள் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பரபரப்பாக இருக்கிறார்கள்.

ராஜபக்ஷக்கள் ஆட்சியை ரணிலிடம் கையளித்து விட்டுச் சென்ற தருணத்தில், நாடாளுமன்றத்துக்குள் இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவின் போது, தனக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர் என்ச் ரணில் கூறியிருந்தார். அதுவும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடான சந்திப்பின் போதே, அவர் அதனை வெளிப்படையாக தெரிவித்தார். இதனை, கூட்டமைப்பினர் அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை. அப்படியான நிலையில், ரணிலின் அணுகுமுறை எவ்வாறானது, எங்கு, எவரோடு, எதனைக் கொண்டு – கொடுத்து கையாளுவர் என்பது தெளிவானது.

நாட்டில் வாகன இறக்குமதிக்கான தற்காலிகத் தடை நீடிக்கின்றது. இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரியற்ற வாகன இறக்குமதியும் நிகழவில்லை. இதனால், வாகன அனுமதிப்பத்திரத்தை வைத்து, சில கோடிகளையாவது தேற்றலாம் என்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பெரும் சங்கடம் ஏற்பட்டது. அதனை, தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ரணில், பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான சாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருக்கின்றார் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை, மகாநாயக்கர்களை சந்தித்த சஜித், ‘சாராய அனுமதிப்பத்திரங்களை வழங்கி ஆள்பிடிக்கும் அரசியலை தோற்கடிப்பேன்.’ என்று கூறியிருக்கிறார். வழக்கமாக தேர்தல் காலங்களில் கோடிகளில் பேரங்கள் நடைபெறும். இப்போதும் அது நிகழ்கின்றது. அதனோடு சேர்த்து மதுபான சாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன எனக் குற்றச்சாட்டுக்கள் உண்டு. ஏற்கனவே, மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்கள், ரணிலின் பக்கத்தில் இருக்கவே விரும்புகின்றனர். ஏனெனில், அவர்கள் சஜித்தோடு இணைந்தால், அவர்களின் விவரங்களை வெளியிடுவோம் என்று ரணில் அணியினர் மிரட்டுகின்றனர் எனத் தென் இலங்கையில் பேசப்படுகின்றது. அடுத்த பொதுத் தேர்தலில் தங்களினால் வெற்றிபெற முடியும் என்று நம்பும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான், இந்தப் பேரங்களில் அவ்வளவுக்கு அடிபடவில்லை. அடுத்த தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புக்கள் குறித்து சந்தேகம் கொண்டவர்கள், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்ற நிலையில், தாவல் படலத்துக்குள் சங்கமித்துக் கோடிகளை அள்ளுகிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஓட்டத்தில் இந்தக் கணம் வரையில் சஜித்தான் முன்னிலையில்

தொடர்ச்சி▼



# ரணிலின் தந்திரங்களைத் தாண்டி முன்னிலையில் ஓடும் சஜித்!

தொடர்ச்சி▲

இருக்கின்றார். அவரை நெருக்கும் அளவுக்கு பக்கத்தில் யாரும் இல்லை. அதனால், அவர் பின்னால் அடுத்த பொதுத் தேர்தலில் தங்களால் வெற்றிபெற முடியும் என்று நம்பும் கட்சிகளும், தலைவர்களும் அணி வகுத்திருக்கிறார்கள். ஆனாலும் சஜித்தின் வெற்றி வாய்ப்புக்களை குறைப்பதற்கான திட்டங்களின் போக்கில், வழக்கத்துக்கு மாறாக பல வேட்பாளர்களையும் களத்தில் இறக்கி விட்டிருக்கிறார்கள். அதிலும் சுயேச்சை வேட்பாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் பலரும் ரணிலின் பினாமிகள். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்திட்டம், சஜித்தை நோக்கி திரளும் வாக்குகளில் ஒரு பகுதியையாவது குறைப்பதாகும். இந்தப் பினாமி வேட்பாளர்கள் தங்களை இனத்தின் காவலர்கள், அப்பழுக்கற்ற மனிதர்கள் என்றெல்லாம் அறிவிக்கும் கூத்துக்கள் எல்லாமும் நடைபெறுகின்றன. சுயேச்சை வேட்பாளர்கள், பிரதான வேட்பாளர்களின் பினாமிகள் என்று, முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சஜித்தின் வாக்குகளை பிரிப்பதற்காக ரணிலால் களமிறக்கப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்களாக விஜயதாச ராஜபக்ஷ, சரத் பொன்சேகா உள்ளிட்டோரையும் தென் இலங்கை பார்க்கிறது. ஏனெனில், தென் இலங்கையிலும் சாதி சார் அரசியல் பெரும் வகிபாகத்தைக் கொண்டிருக் கின்றது. அதன் போக்கில், சஜித்துக்கு எதிராக விஜயதாஸ களமிறக்கப்பட்டிருக்கின்றார் என்ற கருத்து உண்டு. அதுபோல, இராணுவம் உள்ளிட்ட முப்படை சார் வாக்குகள் இலட்சக்கணக்கில் உண்டு. அவற்றில் கணிசமானவை இம்முறை சஜித்துக்கும் அநுரகுமார திஸாநாயக்கவின் பக்கத்திற்கும் செல்லும் சாத்திய முண்டு. அதனைத் தடுத்து நிறுத்துவதற்காகவே இறுதி யுத்தத்தை வென்ற தளபதி என்ற அடையாளத்தோடு பொன்சேகாவை ரணில் களமிறக்கியிருக்கின்றார் என்பதும் குற்றச்சாட்டு. அதன்மூலம், பொன்சேகாவின் விசுவாசிகள் சஜித்தை புறந்தள்ளுவார்கள் என்பது கணிப்பு.

வடக்கு கிழக்கில் ஏற்கனவே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பெயரில் அரியநேந்திரன் களமிறக்கப்பட்டிருக் கிறார். அதனை தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புச் செய்தாலும், அதனால் ஆதாயம் அடையும் வாய்ப்பு ரணிலுக்கானது. இப்படியான இன்னொரு நடவடிக் கையாகவே, மலையக தமிழ் வாக்குகள் சஜித்தை நோக்கி திரள்வதைத் தடுப்பதற்காக திலகராஜ் சுயேச்சை வேட்பாளராக களமிறக்கப்பட்டிருக்கிறார் என்பது, சஜித் அணியினரின் குற்றச்சாட்டு. இந்த விடயங்களைப் புறக்கணிக்க வேண்டியதில்லை. ஏனெனில், இந்தத் தேர்தலில் தமிழ் – முஸ்லிம் சமூகங்களின் வாக்குகளின் பெரும்பான்மையானவை சஜித்தை நோக்கியே திரளும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பொது வேட்பாளர், சுயேச்சை வேட்பாளர் அடையாளங்களைக் கொண்டு, அந்தத் திரட்சியில் ஒரு சில இலட்சம் வாக்குகளைப் பிரித்தாலே, அது ரணிலுக்கான சாதகமான விடயமாகும். ஆனால், ரணில் எதிர்பார்க்காத விடயம் ராஜபக்ஷக் களிடம் இருந்துதான் அவருக்கு பதிலடியாக கிடைத் திருக்கின்றது.

பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்று அடையாளப்படுத்தப்பட்டு வந்த தம்மிக்க பெரேரா, இறுதி நேரத்தில் தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளைக் காரணங்களைக் காட்டி போட்டியில் இருந்து விலகினார். ஆனால், அவரை விலகச் செய்ததில் ரணிலின் பங்கு இருப்பதாக ராஜபக்ஷக்கள் குற்றஞ்சாட்டினார்கள். இந்த நெருக்கடியான நிலையில், இளைய ராஜபக்ஷ வான நாமல் முன்வந்து ரணிலுக்கு எதிரான போராட் டத்தை தலைமையேற்றிருக்கிறார். மற்றவர்களை வேட்பாளர்கள் நிறுத்தினால்தானே, அவர்களை மிரட்டி உருட்டி அடிபணிய வைக்க முடியும், தானே வேட்பாள ராகிவிட்டால், வெருட்டல், உருட்டலுக்கு வழியில்லாமல் போகும் என்பது நாமலின் எண்ணம். அதனால்தான், படுதோல்வி காணும் வாய்ப்புள்ளது என்ற நிலையிலும் நாமல், ஜனாதிபதி வேட்பாளராக முன்வந்தார்.

தம்மிக்க பெரேராவை ஒதுங்க வைத்தால், ராஜபக்ஷ க்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்தே ஒதுங்கி விடுவார்கள் என்பது ரணில் எதிர்பார்ப்பு. அதன்மூலம், ராஜபக்ஷ ஆதரவு வாக்குகள் தனக்கு முழுவதுமாக கிடைத்துவிடும், ஏனெனில், ஏற்கனவே பெரமுனவின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னோடு இருக்கிறார்கள், தேர்தலில் இருந்து ராஜ

தொடர்ச்சி▼





# ரணிலின் தந்திரங்களைத் தாண்டி முன்னிலையில் ஓடும் சஜித்!

தொடர்ச்சி▲

பக்ஷக்கள் ஒதுங்கிவிட்டால், ராஜபக்ஷ ஆதர வாளர்களுக்கு ரணிலைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. இந்த கணிப்பைக் கொண்டு ரணில் காய்களை நகர்த்த, நாமல் தன்னையே களத்தில் நிறுத்தி ரணிலுக்கு செக் வைத்திருக்கிறார். இதன்மூலம், ரணில் பக்கம் திரள வேண்டிய வாக்குகளில் குறைந்தது ஐந்து இலட்சம் வாக்குகளாவது இழக்கப்படும் வாய்ப்புண்டு. ரணில், வடக்கு கிழக்கு, மலையகத்தில் சுயேச்சை வேட்பாளர்களைக் கொண்டு நடத்திய வாக் குப் பிரிப்பு வேட்டையும் தென் இலங்கையில் பொன் சேகா, விஜயதாசவைக் கொண்டு நடத்திய இராணுவ – சாதி ரீதியான அடையாள வாக்குப் பிரிப்பையும் நாமல் களமிறங்கி நாசமாக்கிவிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் பின்னாலான திரட்சி தற்போது பெருமளவு அடிபடத் தொடங்கிவிட்டது. ஏற்கனவே தென் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணி மீதான அதிருப்தி என்பது கணிசமாக உண்டு. அதனை மாற்றுவதற்காக அநுர கட்சியை, பொது அமைப்புக்களோடு இணைந்து தேசிய மக்கள் சக்தியாக பெயர் மாற்றம் செய்தார். ஆனாலும் அது அவ்வளவு சாத்தியமான வெற்றிகளை பெற்றுத்தரு வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அறகலய முடிந்த கையோடு தேர்தல் ஒன்றுக்கு நாடு சென்றிருந்தால், தேசிய மக்கள் சக்தி, இரண்டாமிடத்துக்கு வந்து, பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கும். இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், தேசிய மக்கள் சக்தி மீதான ஈர்ப்பு குறைந்துவிட்டது. அதனை, அந்தக் கட்சியின் பிரச்சாரக் கூட்டங்களிலேயே காண முடி கின்றது. முதலாவது இடத்துக்கு போட்டியிடும் ஆன்ம பலத்தோடு இருந்த தேசிய மக்கள் சக்தியினர், இப்போது மூன்றாமிடத்துக்கான போட்டியிலேயே இருக்கிறார்கள். சிலவேளை அதிலும் அவர்கள் நாமலிடம் தோற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஏனெனில், தென் இலங்கையின் சமூக கட்டுமானம் சாதி – மத – அடிப்படைவாதம் சார்ந் தது. அது, பெரியளவில் மக்கள் விடுதலை முன்னணியை ஆதரித்தது இல்லை.

தமிழரசுக் கட்சியின் ஆதரவு என்பது சஜித்தை நோக்கியதாகத்தான் இன்னமும் இருக்கின்றது. அதனை, இந்தியாவும் வலியுறுத்துவதாக தெரிகின்றது. ரணிலோடு, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தனித்துத் தனித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும், இறுதியில் சஜித்தோடுதான் நிற்பார்கள் என்பதுதான் நிலை. அது, தமிழ் மக்களின் பெருந்திரட்சி எந்தப் பக்கம் என்ற அடிப்படையிலும் நிகழ்வதுமாகும். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை பொதுக் கட்ட மைப்பினர் முன்வைத்தாலும், அந்தக் கட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளே தங்களின் நிலைப்பாடுகளில் உறுதியாக இருப்பதாக தெரியவில்லை. அதனால், பொதுக் கட்டமைப்பின் அரசியல் பத்தியாளர்கள் மாத்திரம் பிரச்சாரம் நடத்தி, பொது வேட்பாளரை நோக்கி, வாக்கைச் சேர்த்துவிடுவார்கள் என்று நம்புவது பெரும் அபத்தமாகும். அதனால், அது சில ஆயிரம் வாக்குகளோடு இன்னொரு எம்.கே.சிவாஜிலிங்கமாக அரியநேந்திரனை கட்டமைப்பதோடு முடிந்து போகும். அப்படியான நிலையில், பெரும்பான்மையான தமிழ் வாக்குகள் தங்களோடு இருப்பதாக காண்பிப்பதற்காக தமிழரசுக் கட்சி செயற்படும். அது, சஜித்தை நோக்கிய திரட்சியாகவே இருக்கும். கடந்த காலங்களைப் போன்றே, வாக்கெடுப்புக்கு சில நாட்களுக்குப் முன் னால், சஜித்தை ஆதரிப்பதான அறிவிப்பை தமிழரசு விடுக்கும்.

இன்னொரு பக்கம், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் கருத்து வெளியிட்டு வந்த தமிழரசின் முக் கியஸ்தர் ஒருவரை டில்லி அவசரமாக அழைத்தி ருக்கின்றது. அங்கு அவருக்கு சஜித்தை நோக்கிய நகர்வுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று அழுத்தம் வழங்கி அனுப்பியிருக்கிறார்கள். இனி வரும் காலங் களில், சம்பந்தப்பட்ட தலைவர், பொது வேட்பாளர் பற்றி பேசுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஏனெனில், தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் தலைவர்களுக்கு இந்தியாவே இன்னமும் எஜமான். தென் இலங்கையின் உணர்நிலை என்பது, சஜித்தை நோக்கிய திரட்சியாக இருக்கின்ற நிலையில், அந்த ஓட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொள்ள இந்தியா நினைக்கின்றது. அதனால்தான், சஜித்துக்கான ஆதரவு நிலையில் இந்தியா இருக்கின்றது. அதன்மூலம், எதிர்காலத்தில் சஜித்தோடு நெருக்கமாக இயங்கலாம் என்பது பிராந்திய வல்லரசின் எதிர்பார்ப்பு. ரணிலைப் போன்ற மூத்த தந்திரசாலியைக் கையாள்வது இந்தியாவுக்கு பெரும் தலையிடியானது. அப்படியான நிலையில், சஜித் அவர்களுக்கு விருப்பான தேர்வு.

வாக்குத் திரட்சிக்கான நகர்வுகள், பிரித்தாளும் உத்திகள், கோடிகளில் பேரம் என்று எதிர்வரும் ஒரு மாத காலத்தில் அதிகமான பரபரப்புக்களை தேர்தல் களம் காட்டப் போகின்றது. இந்த அலைக்கழிப்புக்களில் அடங்காத பெரும்கூட்டமான மக்கள் தங்களின் நாளாந்த வாழ்வாதாரத்துக்கே போராடிக் கொண் டிருக்கிறார்கள். இந்த அரசியல்வாதிகளும் முகவர்களும் தின்று கொழுத்து பெருச்சாளிகளாக திளைக்கிறார்கள். தேர்தல்கள் முடியும் வரையில் இதுதான் காட்சிகளாகப் போகின்றது.



# மொட்டுவின் மாத்தறை எம்.பி. சஜித்தின் பக்கம் இணைந்தனர்

நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாஸ கொடித்துவக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர் கருணாதாஸ கொடித்துவக்கு 2024 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குத் தனது ஆதரவை நல்கத் தீர்மானித்துள்ளார்.

இதன் பிரகாரம், நேற்று மாத்தறை அகுரெஸ்ஸ நகரில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவை வெற்றியை உறுதிப்படுத்தும் மூன்றாவது பேரணியில் கலந்து கொண்டு தனது ஆதரவை அவர் வெளிப்படுத்தினார்.





# வாகரையில் மக்களுடன் சர்ச்சையை அடுத்து ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம்!

(கனகராசா சரவணன்)

வாகரைப் பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி புதூரில் தமது காணியை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் துப்பரவு செய்ய சென்றவர்களைப் பொது மக்களின் காணியை அபகரிக்க முயல்கின்றனர் எனத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்கள் அதனைத் தடுத்து நிறுத்த முற்பட்டபோது சர்ச்யை ஏற்பட்டது. ஜே.சி.பி. இயந்திரம் மீது இடம்பெற்ற கல்வீச்சு தாக்குதலையடுத்து பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தனது கைதுப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி பிரயோகம் செய்தார். இதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:–

மேற்படி கடல் பிரதேசத்தை அண்டிய 11 ஏக்கர் காணி லண்டனில் வசித்துவரும் தமிழர் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது. கடந்த காலத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அதனை அவர் விற்பனை செய்திருந்திருக்கின்றார்.

இந்த நிலையில் அந்தக் காணியைத் துப்பரவு செய்து கம்பி வேலி அடைக்கும் நடவடிக்கைக்காக நேற்று ஜே.சி.பி. இயந்திரத்துடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சென்றுள்ளார். அவர் துப்பரவுப் பணியை ஆரம்பித்த நிலையில் அங்கு ஒன்று கூடிய மக்கள் அவர் அவருடைய காணியின் எல்லையைத் தாண்டி தங்களது காணியை அபகரிக்கின்றார் எனவும், அவருடைய காணியில் சுமார் ஓர் ஏக்கர் நிலப்பரப்பு கடல் அரிப்பினால் கடலுக்குள் சென்றுவிட்டது எனவும் வாதிட்டிருக்கின்றனர்.

எனவே தற்போது கடல் இருக்கும் இடத்தில் இருந்து உங்கள் காணி பின் நோக்கி இருப்பதாக நினைத்து காணி எல்லையைத் தாண்டி, தங்களின் காணிகளை அவர் அபகரிக்கின்றார் என அவர்கள் தெரிவித்தனர். இதன் போது இரு சாராருக்கும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் ஜே.சி.பி. இயந்திரத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது. அதன் கண்ணாடிகள் உடைந்தமையை அடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தனது பாதுகாப்புக்காக வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதனையடுத்து அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் சென்று நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அவருடன் ஜே.சி.பி. இயந்திரத்தையும் பாதுபாப்பாக அங்கிருந்து வெளியேற்றி, பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாணைகளை வாகரைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



# வீட்டில் நித்திரையில் இருந்த ஐந்து வயதுக் குழந்தையை கடத்தியவரை மடக்கிப் பிடித்து நையப்புடைத்த மக்கள்!

## வாகரையில் விடிகாலையில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

வீடு ஒன்றில் நித்திரையில் இருந்த ஐந்து வயதுச் சிறுவனைக் கடத்தல்காரன் ஒருவன் கடத்திக் காட்டுக்குள் கொண்டு சென்ற சமயம் பிரதேச மக்கள் அவனை மடக்கிப் பிடித்துக் குழந்தையை மீட்டனர். கடத்தல்காரனை நையப்புடைத்துப் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலையில் மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. அதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை 5 ஆம் வட்டாரத்தைச் சோந்த 5 வயதுடைய மோகன் கிறீத்தி என்ற குழந்தை தாய் தந்தையுடன் நித்திரையில் இருந்த சமயம் அதிகாலை 3.30 மணியளவில் தாயிடம் பால் கேட்டிருக்கின்றது. இதையடுத்து தயார் தந்தைக்கு பக்கத்தில் சிறுவனை படுக்க வைத்துவிட்டு சமையலறைக்குச் சென்று பால் போத்தலுடன் திரும்பி வந்தபோது நித்திரையில் இருந்த குழந்தையைக் காணாததையடுத்து அந்தப் பகுதி மக்கள் ஒன்று திரண்டு குழந்தையைத் தேடினர்.

இதன் போது குழந்தையை கடத்தல் காரன் ஒருவர் கடத்திக் கொண்டு காட்டுப் பகுதிக்குச் செல்வதை கண்ட மக்கள் காட்டைச் சுற்றி வளைத்தனர். கடத்திய நபர் குழந்தையை காட்டில் விட்டுவிட்டு, அந்தப் பகுதியில் ஒளிந்திருந்த நிலையில் அவனைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர். நையப்புடைத்துப் பொலிஸாரிடம் கடத்தல்காரனை ஒப்படைத்தமையுடன் குழந்தையையும் அவர்கள் மீட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கைது செய்யப்பட்ட குழந்தைக் கடத்தல்காரன் வாழைச்சேனை செம் மண் ஓடைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவன் எனவும், போதை பொருளுக்கு அடிமையானவன் எனவும், பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்புபட்டவன் என்பதுடன் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் பட்டியில் சேர்க்கப்பட்ட நபர் (ஜ.ஆர்.சி) எனவும், போதைப் பொருள் வாங்கப் பணத்திற் காக குழந்தையைக் கடத்திக் கப்பம் பெற இருந்துள்ளார் எனவும் பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் வாழைச் சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 23 ஆம் திகதிம் வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஓய்வூதியர் அனைவருக்குமே இடைக்காலஜ் கொடுப்பனவு

## சுற்றறிக்கை வெளியீடு

ஓய்வூதியம் பெறும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் இடைக்கால கொடுப்பனவொன்றை வழங்குவது தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளரினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாத கொடுப்பனவை ஒக்டோபர் மாத கொடுப்பனவுடன் வழங்கவுள்ளதாக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு, திறைசேரி மற்றும் ஓய்வூதிய திணைக்களம் ஆகிய பிரிவுகளுக்கு இந்த சுற்றறிக்கையின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.



ஓய்வூதியம் பெறும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் 3,000 ரூபா இடைக்கால கொடுப்பனவு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.



# கண்டி மாவட்டத் துரோகிக்கு தக்க பாடத்தைப் புகட்டுவோம்

## திகாம்பரம் எம்.பி. சூளுரை

(க.கிஷாந்தன்)

கண்டி மாவட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் வாக்குகளை எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ விற்குப் பெருவாரியாக பெற்றுக் கொடுப்போம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியை சேர்ந்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதான அமைப்பாளர்களை கினிகத் தேனையில் வைத்து நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு யார் துரோகம் செய்தாலும் அதனை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வருகின்ற தேர்தல்களில் துரோகம் செய்தவர்களுக்கு மக்கள் தகுந்த பாடத்தைக் காட்டுவார்கள். அத்தோடு, கண்டி மாவட்டத்தில் இருக்கின்ற எமது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வாக்காளர்கள் எந்த வகையிலும் தமது மனதிடத்தை இழக்காமல் தொடர்ந்தும் அரசியல், தொழிற்சங்க செயற்பாடுகளில் ஈடுப்பட வேண்டும்.

அதற்கு நான் உட்பட தமிழ் முற்போக்கு கூட்டணியுடைய தலைவர்கள் உறுதுணையாக இருப்போம். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே கண்டி மாவட்ட தமிழ் மக்கள் நிச்சயமாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கத் தயார் நிலையில் இருக்கின்றார்கள்.





ஆகவே, கண்டி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தமிழ் முற்போக்கு கூட்டணி தொடர்ச்சியான கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. அதன் ஆரம்ப கட்டமாகவே அமைப்பாளர்களாகிய உங்களைச் சந்தித்து இருக்கின்றேன். அடுத்த கட்ட நடவடிக்கைகளில் நாங்கள் தீவிரமாக ஈடுபட இருக்கின்றோம்.

எதிர்வரும் புதிய அரசாங்கத்தில் நாங்கள் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டு கண்டி மாவட்டத்தில் உள்ள தோட்டப்பகுதி உட்பட எல்லா பிரதேசத்திலும் இடை நிறுத்தப்பட்டிருக்க அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தயாரான நிலையில் இருக்கின்றோம்.

எனவே, எமக்குத் துரோகம் இழைத்தவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் தகுந்த பாடத்தை புகட்டுவோம். – என்று பழனி திகாம்பரம் மேலும் தெரிவித்தார்.






# மக்களை இனவாத ரீதியாக பிரித்தாளும் சுயநல தந்திரத்திற்கு முடிவுகட்டுவோம்!

## முதல் பிரசாரக் கூட்டத்தை யாழில் நடத்தி திலித் ஜயவீர சூளுரை

நாட்டிலுள்ள மக்களை இனவாத ரீதியாக பிரித்தாளும் சுயநல தந்திரத்திற்கு முடிவுகட்டி அனைவரும் சமனாக வாழும் நிலையை ஏற்படுத்துவோம்.

– இவ்வாறு யாழில் வைத்துத் தெரிவித்துள்ள சர்வசன அதிகாரக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளில் அனேகமானவர்கள் சுயநலப் போக்கைக் கொண்டவர்களாகவும் இனவாத அரசியலை மேற்கொண்டு வருபவர்களாகவும் உள்ளனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் யாழ் நகருக்கு அருகாமையிலுள்ள றக்கா வீதியிலுள்ள இளங்கதிர் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இந்த நாட்டிலே அனைவரும் சமனாக வாழும் கலாச்சாரத்தை ஏற்படுத்த நான் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கி உள்ளேன்.

தமிழ அரசியல்வாதிகள் சிலர் சுயநலப் போக்குடன் செயல்பட்டு வரும்

தொடர்ச்சி▼






# மக்களை இனவாத.....

தொடர்ச்சி▲

நிலையில் இனவாதம் பேசி வடக்கையும் தெற்கையும் இணைய விடாது தமது அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வசன அதிகாரம் என்ற கூட்டணியை உருவாக்கி நட்சத்திர சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கிய நான் எனது முதலாவது ஜனாதிபதி வேட்பாளர் பிரச்சாரத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளேன்.

இந்த நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒரே நாட்டில் அனைவரும் சமனாக வாழும் நிலையை உருவாக்க வேண்டும் அல்லாமல் பிரித்தாளும் இனவாதத்திற்கு முடிவு காட்ட வேண்டும்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளேன். ஏனெனில் இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது குடும்பத்தை காத்தவர்கள் பெண்கள்.

பெண்களுக்கான வாழ்வாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அவர்களுக்கான தொழில்துறையை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தயாராகவுள்ளேன்.

தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் மக்களிடம் செல்கிறார்கள். 13 வேண்டும், சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற பழைய பாடலை பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே இலங்கை நாட்டில் அனைத்து இன மக்களும் சமனாக வாழும் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்கு நட்சத்திர சின்னத்துக்கு வாக்களித்து உங்கள் எதிர்காலத்தை பலப்படுத்துங்கள். - என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர மும்மதத் தலைவர்களிடம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கையளித்தார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத ஜகம்பத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# நாட்டின் அனைத்து இனங்களையும் ஒன்றிணைக்கின்ற ஜனாதிபதியாக 40 ஆண்டுகளின் பின் கிட்டியவர் சஜித்!

## நுவரெலியா மாவட்ட எம்.பியான இராதாகிருஷ்ணன் புகழாரம்

(க.கிஷாந்தன்)

நாற்பதாண்டுகளின் பின்னர் இந்த நாட்டின் அனைத்து இனங்களையும் ஒன்றிணைக்கும் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவார் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நேற்று ஹட்டனில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்த போதே இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

நாட்டில் இனவாதத்தையும் சாதியவாதத்தையும் விதைத்து முன்னாள் ஜனாதிபதிகள் ஆட்சியில் இருந்தனர். 40 வருடங்களின் பின்னர் சஜித் பிரேமதாஸவே இந்த நாட்டில் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளராக வந்துள்ளார்.



இன்று ரணிலுக்கு ஆதரவாக இணைவோருக்கு மதுபான விற்பனை உரிமம் மற்றும் பணம் வழங்கப்படுகின்றது. ஒரு மதுபான அனுமதிப்பத்திரத்தின் பெறுமதி சுமார் ஐந்து கோடி ரூபா எனக் கூறப்படுகின்றது.

இன்று ஜனாதிபதியைச் சுற்றித் திரண்டுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளவர்கள்.

சஜித் பிரேமதாஸ இந்த நாட்டில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், தற்போதைய ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து வழங்கப்பட்ட அனைத்து மதுபான அனுமதிப் பத்திரங்களையும் ரத்து செய்யவுள்ளார்.

சஜித் பிரேமதாஸவைச் சுற்றித் திரண்டிருக்கும் மக்கள் இந்த நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பணிக்காக ஒன்றுபட்டுள்ளனர். அந்தக் குழுவினருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும் இல்லை. பெருந்தோட்ட மக்கள் இம்முறை சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கத் தயாராக உள்ளனர். அந்த மக்களை யாராலும் ஏமாற்ற முடியாது. – எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொலிஸுக்கு 14 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக 7 முறைப்பாடுகளும் வன்முறை சம்பவங்கள் குறித்து 7 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 03 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சட்டவிரோத பிரசாரச் செயற்பாடுகள் தொடர்பில் இந்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.



# 13 ஆண்டுகளின் பின்னர் யானைகள் கணக்கெடுப்பு

13 ஆண்டுகளின் பின்னர் நாடளாவிய ரீதியில் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்று மற்றும் இன்று, நாளை ஆகிய 3 நாள்களுக்கு யானைகள் தொடர்பான கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படுமென வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 3130 நிலையங்களில் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டில் வாழும் யானைகளின் முழுமையான எண்ணிக்கையை உறுதிசெய்துகொள்ளக்கூடிய வகையில் நாடளாவிய ரீதியில் தரவுகள் மற்றும் தகவல்களை புதுப்பிக்க 2011 ஆம் ஆண்டின் பின்னர் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



ஆசியாவில் யானைகள் வாழும் குறிப்பிட்ட சில நாடுகளில் ஒன்றாகவுள்ள இலங்கையில் யானைகளின் பாதுகாப்பு தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சர்வதேச பாதுகாப்பு முயற்சிகளுக்கு அமைவாக அதனை நாட்டின் பொறுப்பாக உருவாக்கியுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.08.2024




கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் மகிழ்ச்சியாக உற்சாகமாக செய்யுங்கள். இதனால் நன்மை விளையும்.

இன்று நீங்கள் சிறப்பாகவும் விரைந்தும் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உறவின் அம்சங்களுக்கு மதிப்பு அளிப்பீர்கள். நட்பான உறவு கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். திருப்திகரமாக இருக்கும். நீங்கள் பணம் அதிகம் சேமிப்பதற்கான நிலையும் காணப்படும்.

இன்று நீங்கள் போதிய ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பீர்கள்.




உங்கள் செயல்திறனை மேம்படுத்துங்கள். இன்று வெற்றி கிடைக்கும் நாள். உங்களை முன்னேற்றிக்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணி செய்யும் பாணியில் மாற்றங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியோர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமான உறவுக்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மிதமாக இருக்கும். வரவு செலவு இரண்டுக்குமான வாய்ப்பு அதிகம். பணத்தை கவனமாக கையாள்வது சிறந்தது.இன்று சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும். மேலும் கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது பொறுமை அவசியம்.

இன்று உறவில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பேசத் தொடங்குமுன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டியது அவசியம்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உணவுக் கட்டுப்பாடு மேற்கொள்வது சிறந்தது. இனிப்பு வகை உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பெரும்பாலும் உங்களுக்கு சாதகமான நாள். இன்று நல்ல நண்பர்கள் மற்றும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள உகந்த நாள். பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். தொழிலைப் பொறுத்த வரை நல்ல லாபம் கிடைக்கும்.

குடும்பத்தில் அமைதியும் திருப்தியும் காணப்படும். உங்கள் வீட்டில் விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றலும் உயர்ந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் சளி இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




முயற்சியின் மூலம் வெற்றி கிடைக்கும் நாள். பயணம் மூலம் வெற்றி காண்பதற்கு வாய்ப்புள்ள நாள்.

பணியிடச் சூழல் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். என்றாலும் இன்று பொதுவாக இன்று மகிழ்ச்சி நிலவும் நாள்.

பணம் அதிகமாக காணப்படும். இன்னும் அதிக பணம் தேவைப்பட்டால் வங்கியில் கடன் வாங்கி அதனை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு நோக்கம் நிறைவேறும் வகையில் பயனுள்ள முடிவுகளை எடுக்கும் நாள். இன்று நீங்கள் நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். பணியில் உங்கள் திறமைகளை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காண்பீர்கள். குழந்தைகளின் வளர்ச்சி மனத் திருப்தியை அளிக்கும்.

பங்குகளில் முதலீடு செய்வது லாபகரமாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் லாபம் கிடைக்கும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக உணர்வீர்கள்.




இன்று துடிப்பான நாள். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் இன்று நீங்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவீர்கள்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. பணியில் உங்கள் திறமை பிரகாசிக்கும்.

உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் பணம் காண்பீர்கள். உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்துக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சுய வளர்ச்சிக்கு இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நலனுக்காக இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணியில் சீரான பலன்கள் கிடைக்கும். இன்று பணிகள் எளிதாகவும் சுமூகமாகவும் நடக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் அமைதியான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை பொறுத்தவரை சிறப்பான நாள். இன்று நிதிநிலையை சிறப்பாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.08.2024




இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் செயல்களை செய்யுங்கள். ஆனால் உடனடி பலனை எதிர்பார்க்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. நீங்கள் பணியில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சுமூகமாகப் பணிகள் நடக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்துக்குத் தேவையான பிணைப்பு இன்று காணப்படாது. பேசும் போது கவனம் தேவை.

அதிக செலவுகள் காரணமாக இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். சேமிப்பும் குறைவாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




முக்கிய முடிவுகளை வேறொரு நாளைக்கு தள்ளிப்போடுவது சிறந்தது. சுப காரியங்கள் நடப்பதும் தாமதம் ஆகும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணியில் பிரகாசிக்க நீங்கள் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

குடும்பத்தில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் நல்லுறவு பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சேமிப்பு பழக்கத்தை பராமரிப்பது நிதியின் ஸ்திரத்தன்மைக்கு உதவும்.

கால்கள் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று சமநிலையான நாள். நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் பராமரிக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழில் செய்பவர்களுக்கு இன்று சிறப்பான நாள். அதிக லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. வேலை புரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

குடும்ப உறவில் அன்பும் நல்லிணக்கமும் காணப்படும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று லாபம் காண்பீர்கள்.இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

சளிப் பிரச்சினை காணப்படும். மற்ற படி உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது வருத்தம் அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடச் சூழல் சாதகமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது மாறுபட்ட அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் அன்பு மயமான உணர்வும் உற்சாகமும் காணப்படும். உங்கள் குடும்பத்தில் நடக்கும் நிகழ்சிகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்துடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.









## இந்தியா முழுவதும் மருத்துவ சேவை பாதிப்பு:

# பெண் மருத்துவருக்கு நீதி கேட்டு போராட்டம்

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்துக்கு நீதி கேட்டு இந்திய மருத்துவர்கள் சங்கம் சார்பில் நாடு முழுவதும் மருத்துவர்கள் நேற்றுக் காலை முதல் 24 மணி நேர வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தனர். இதனால் இந்தியா முழுவதும் மருத்துவ சேவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடூர சம்பவம் நடந்த ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் புறநோயாளிகள் சிகிச்சை பிரிவு முற்றிலும் முடங்கியுள்ளது. பாட்னா எய்ம்ஸ் மருத்துவமனையில் புறநோயாளிகள் சிகிச்சை பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோல் பல்வேறு மாநிலங்களிலும் கடுமையான பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இதனால் மருத்துவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு உடனடியாக மக்கள் நலன் கருதி பணிக்குத் திரும்பும்படி மத்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

கொல்கத்தா பெண் மருத்துவர் கொலைக்கு நீதி கேட்டு தமிழகம் முழுவதும் பரவலாக பல்வேறு மாவட்டங்களிலும் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரிகளிலும் மருத்துவர்கள் புறநோயாளிகள் பிரிவை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒரு மணி நேரம் நடந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தால் புறநோயாளிகள் பிரிவில் சிகிச்சைக்காக வந்தவர்கள் சிரமத்துக்கு உள்ளாகினர்.

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கத் தலைவர் வைத்தியர் செந்தில் கூறும்போது,

"தமிழகம் முழுவதும் 37 இடங்களில் மருத்துவர்கள் போராட்டம் நடத்தினர். மொத்தம் 25,000 மருத்துவர்கள் கலந்து கொண்டுள்ளனர். கொலையான பெண் மருத்துவருக்கு நியாயம் வேண்டும். குற்றவாளிகளை கண்டறிந்து, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் இருக்க கடும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மருத்துவர்கள் அச்சமின்றி பணிபுரிய மருத்துவமனை பாதுகாப்பு சட்டம் இந்திய அளவில் வேண்டும்.

தமிழகத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகிறது. அதனால், தனியார் மருத்துவமனைகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும். மருத்துவர்கள், குறிப்பாக பெண் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.

கர்நாடகாவில் பரவலாக மருத்துவர்கள் பணியை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டம் குறித்து, கர்நாடகா மாநில இந்திய மருத்துவ சங்கம் தலைவர் ஸ்ரீனிவாச அளித்த ஊடகப் பேட்டியில்,

"கொல்கத்தா பெண் மருத்துவருக்கு நடந்த துயரம் ஏற்றுக் கொள்ள முடியாதது. இதில் எந்த அரசியல் தலையீட்டையும் நாங்கள் விரும்பவில்லை. மருத்துவர்களும் பிற தொழில் முறை நிபுணர்களைப் போல் சிரமங்கள் நிறைந்த பணியைத்தான் செய்கிறோம். ஆகையால் எங்களுக்கு பாதுகாப்பு தேவை." – என்றார்.

கர்நாடக சுகாதார அமைச்சர் தினேஷ் குண்டுராவ் கூறுகையில்,

"இது ஒரு முக்கியமான பிரச்சினை. மருத்துவமனைகள் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக பெண்கள் பாதுகாப்பு முக்கியம். வரும் செவ்வாய்க்கிழமை மருத்துவர்கள், தாதியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளேன். இப்போதுள்ள சட்டங்கள், தேவையான மேம்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கவுள்ளேன். இன்று மருத்துவர்கள் போராட்டம் நடத்துகின்றனர். அது அவர்களின் உரிமை. அதேவேளையில் நோயாளிகள் பாதிக்கப்படாத வண்ணம் போராடும்படி கேட்டுக் கொள்கிறேன்." – என்றார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கருத்து தெரிவிக்கையில்,

"மம்தா பானர்ஜி ஒரு பெண். அவருக்கு ஒரு பெண்ணின் வேதனை தெரியும். அவர் இந்தப் பிரச்சினையில் கோரிக்கைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நேரத்தில் பா.ஜ.க. இதைவைத்து அரசியல் செய்யக் கூடாது." என்று கூறியுள்ளார்.

இவ்வாறாக இந்தியா முழுவதும் நடக்கும் மருத்துவர்கள் போராட்டம் எல்லைகள் கடந்தும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ள நிலையில் மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பா.ஜ.க, ஏ.பி.வி.பி. அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. மம்தா பானர்ஜி பதிவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. காங்கிரஸ் கட்சி சார்பில் கொல்கத்தா பெண் மருத்துவர் படுகொலைக்கு நீதி கோரி மேற்கு வங்கத்தில் பேரணி நடத்தப்பட்டது.

# ராஜஸ்தானின் வன்முறை: இணைய சேவை முடக்கம்



ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து மக்கள் ஒன்றுகூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இணைய சேவையும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

உதய்பூரில் 10 ஆம் வகுப்பு படிக்கும் பாடசாலை மாணவர் ஒருவரை சக மாணவர் ஒருவர் கத்தியால் குத்தியதில் பாதிக்கப்பட்ட மாணவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய மாணவனும், தாக்கப்பட்ட மாணவனும் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் சமூக பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

நான்கு கார்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. பல வாகனங்கள் கல் வீசி தாக்கப்பட்டுள்ளன. பதற்றம் காரணமாக உதய்ப்பூரின் பல பகுதிகளில் கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. மக்கள் கூடுவதற்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தவறான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுக்க இணைய சேவை முடக்கப்பட்டுள்ளது.





# தீவிரமடையும் உக்ரைன் ரஷ்ய மோதல்: சரணடைந்தனர் 24 உக்ரைனிய வீரர்கள்

ரஷ்யாவிற்குள் உக்ரைன் ஊடுருவியுள்ள நிலையில், 24 உக்ரைனிய வீரர்கள் குர்ஸ்க் பகுதியில் நடந்த சண்டையின் போது ரஷ்ய படைகளிடம் சரணடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைனிய படைகள் தற்போது சர்வதேச எல்லைப் பகுதியை தாண்டி ரஷ்யாவிற்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், ரஷ்யா மக்களை வேகவேகமாக நகர்த்தி வருகிறது.

குர்ஸ்க் பகுதியை முழுவதுமாக கைப்பற்றும் நோக்கில் தாக்குதல் நடத்தி வரும் உக்ரைனிய படைகள், சமீபத்தில் அமெரிக்கா அளித்துள்ள உஐஆயுசுளு ஏவுகணையை பயன்படுத்தி ரஷ்ய பிராந்தியத்தின் முக்கியமான பாலங்களில் ஒன்றை இரண்டாக உடைத்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த பாலம் உக்ரைன் வடக்கு எல்லைப் பகுதியில் 6.8 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் நடைபெற்ற சண்டையின் போது 22 ஆவது தனி இயந்திரமயமாக்கப்பட்ட படைப்பிரிவைச் சேர்ந்த 24 உக்ரைனிய வீரர்கள் ரஷ்ய ஆயுதப்படையிடம் சரணடைந்துள்ளனர் என அந்த நாட்டின் அரசு செய்தி ஊடகமான RIA Novosti தெரிவித்துள்ளது.

குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள Komarovka என்ற கிராமத்திற்கு அருகே இந்த 24 உக்ரைனிய வீரர்களும் சரணடைந்துள்ளனர் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், குர்ஸ்க் பகுதியில் நடைபெற்ற சண்டையில் உக்ரைன் 2,860 இராணுவ வீரர்களையும், 41 டாங்கிகளையும் இழந்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# உக்ரைனுக்கு உதவினார் பெண் ரஷ்ய நடன கலைஞர்

## 12 ஆண்டுகள் சிறையில் அடைப்பு

உக்ரைனை ஆதரிக்கும் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு நிதி நன்கொடை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில், நடனக் கலைஞர் க்சேனியா கரேலினுக்கு ரஷ்ய நீதிமன்றம் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கரேலின் ஒரு அமெரிக்க மற்றும் ரஷ்ய இரட்டை குடியுரிமை நடனக் கலைஞர் ஆவார்.

அமெரிக்க குடியுரிமை பெற்று 2021 முதல் லொஸ் ஏஞ்சல்ஸில் வசித்து வருகிறார். இந்த ஆண்டு ஜனவரியில், அவர் தனது குடும்ப உறுப்பினர்களை காண ரஷ்யா வந்தபோது, ரஷ்ய அதிகாரிகள் கரேலினைக் கைது செய்து, அவர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, உக்ரைனை ஆதரிக்கும் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு பணத்தை நன்கொடையாக வழங்கியது ரஷ்யாவிற்கு செய்த தேசத்துரோகம் என்றும் நன்கொடை அளிக்கப்பட்ட பணத்தின் அளவு பொருத்தமற்றது எனவும் வழக்குத் தொடுத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் விளைவாக, கரேலினுக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க வேண்டும் என்று வழக்குத் தொடுத்த அதிகாரிகள் நீதிமன்றத்தை நாடினர்.

வெளியாட்கள் பங்கேற்காமல் விசாரணை நடத்தப்பட்டதாகவும், க்சேனியா கரேலின் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிமன்றம் அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்த அன்று கரேலினா தனது கைப்பேசியைப் பயன்படுத்தி உக்ரைனுக்காக 51.80 அமெரிக்க டொலர்களை நன்கொடையாக அளித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# றோட்டரி மாவட்டம் 3220 ஆரம்பித்துள்ள Rotary for Little Hearts முயற்சி




இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியவற்றை உள்ளடக்கிய றோட்டரி மாவட்டம் 3220, 'Rotary for Little Hearts' என்ற முயற்சியை ஆரம்பித்துள்ளமை குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது.

பேராவல் கொண்ட இச்செயற்திட்டமானது, கொழும்பிலுள்ள சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிறுவர் இருதய சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துவதற்காக 1 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை திரட்டுவதை நோக்கமாகக் கொண்டது.

இலங்கையில் ஒவ்வொரு குழந்தையும் குறித்த நேரத்தில், கருணைமிக்க மற்றும் உலகத்தரம் வாய்ந்த இருதய சிகிச்சைக்கான அணுகலைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் ஆரோக்கியமான மற்றும் நிறைவான வாழ்வை முன்னெடுப்பதற்கு இடமளிப்பதை உறுதி செய்வதே இந்த முயற்சியின் அடிப்படை நோக்கம்.

சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிறுவர் இருதய சிகிச்சை தொடர்பாக காணப்படுகின்ற முக்கியமான குறைபாடுகளுக்கு தீர்வு காண்பதில் Little Hearts சிறுவர் வைத்தியசாலை செயற்திட்டம் கவனம் செலுத்தியுள்ளது.

சர்வதேச தராதரங்களை எட்டும் வகையில் தீவிர சிகிச்சைப் பிரிவிலுள்ள கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தீவிர சிகிச்சைப் பிரிவின் ஆற்றலை அதிகரித்தல், பாரதூரமாக நோய்வாய்ப்பட்டுள்ள சிறுவர்கள் தாமதமின்றி தேவையான சிகிச்சையை பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல் போன்ற பல்வேறு முக்கிய முயற்சிகளை இது உள்ளடக்கியுள்ளது.

இருதய வியாதிகளைக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு நேரகாலத்தில் சிகிச்சையை வழங்குவதற்கு சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக சத்திர சிகிச்சை வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

இருதய வியாதிகள் மற்றும் பாரதூரமான வியாதிகளைக் கொண்ட சிறுவர்களுக்கு குறித்த நேரத்தில், போதுமான சிகிச்சையை உறுதி செய்வதன் மூலமாக இறப்பு வீதங்களை கணிசமான அளவில் குறைத்துக் கொள்ள வைத்தியசாலையால் முடிவதுடன், அதன் மூலமாக குழந்தைகளின் இறப்பு வீதம் குறைக்கப்படுகின்றது.

மாவட்டம் 3220 இன் 2024/2025க்கான மாவட்ட ஆளுநர் சுஷேன ரணதுங்க அவர்கள் நிகழ்வில் உரையாற்றுகையில்,

“உலகில் மிகவும் பாரதூரமான மனிதாபிமான சவால்களைக் கையாள்வதில் அர்ப்பணிப்புக் கொண்ட தன்னார்வத் தொண்டர்களின் உலகளாவிய வலையமைப்பாக சர்வதேச றோட்டரி இயங்கி வருவதுடன், இம்முயற்சியில் அர்ப்பணிப்புடைய கூட்டாளர்களாக நாம் உள்ளோம்.

கொழும்பு பெருநகரம், கொழும்பு கோட்டை மற்றும் கொழும்பு மேற்கு ஆகிய மூன்று றோட்டரி கழகங்களால் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன், அவை ஒவ்வொன்றும் சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையுடன் நீண்ட கால ஈடுபாட்டையும், உறவுமுறையையும் பேணி வருகின்றன.

பங்களிப்பு மூலமாகவே றோட்டரிக் கழகங்களில் வளம் பெருக்கப்படுவதுடன், இந்த அளவிலான இலக்கொன்றை முன்னெடுப்பதற்கு ஒத்த சிந்தனை கொண்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தேவை.



இன்று சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலை மற்றும் இலங்கை சிறுவர் வைத்தியர்கள் கல்லூரி ஆகியவற்றுடனான எமது பங்களிப்பை பெருமையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதுடன், Rotary for Little Hearts இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்வதன் மூலமாக, சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை வளாகத்தில் நீடித்து நிலைக்கும் விளைவை ஏற்படுத்தும் எமது இலக்கிற்கு பொதுமக்களின் ஈடுபாட்டை நாம் தீவிரமாக வேண்டி நிற்கின்றோம்,” - என்றார்.




# மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் செலான் வங்கி முக்கிய மைல்கல்லை எட்டுகிறது






செலான் வங்கி தனது 250 ஆவது செலான் பஹசர நூலகத்தை கொழும்பு 14 இல் உள்ள புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் திறந்து வைத்தது.

இது இலங்கை முழுவதும் எழுத்தறிவு மற்றும் கல்வியை மேம்படுத்தும் பணியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

11 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சியானது மாற்றத்திற்கான சக்திவாய்ந்த கருவியாக எண்ணற்ற இலங்கை மாணவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து சமூக அபிவிருத்தி மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றது.

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செலான் பஹசர நூலகத் திட்டம் போதுமான வளங்கள் மற்றும் உதவிகள் அற்ற , உதவிகள் மற்றும் ஆதாரங்கள் தேவைப்படும். பாடசாலைகளின் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

வங்கியின் 25 ஆவது ஆண்டு நிறைவுடன் ஒருங்கே அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம், கல்வி மூலம் நாட்டின் எதிர்காலத்திற்கு பங்களிக்கும் தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கும் வகையில் நாடு முழுவதும் குறைந்த வளங்களை கொண்ட பாடசாலைகளுக்கு ஆதரவு வழங்கி வருகிறது.

இத்திட்டம் குறித்து செலான் வங்கியின் பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

“செலான் பஹசர நூலகத் திட்டம் புத்தகங்களை வழங்குதல் மற்றும் நூலக எண்ணிக்கைக்கு அப்பால் விரிவடைந்து நம்பிக்கையின் பாலமாக உருவெடுத்துள்ளது. இத்திட்டம் இலங்கை

( B3 ஆம் பக்கம் பார்க்க)













# யூனியன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தில்ஷான் ரொட்ரிகோ நியமனம்

யூனியன் வங்கி தனது புதிய பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியாக டில்ஷான் ரொட்ரிகோ நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

2024 ஓகஸ்ட் 16 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வங்கியியல் துறையில் இரண்டு தசாப்த காலத்துக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள ரொட்ரிகோவின் நியமனம், வங்கியின் மெருகேற்றிடும் மாற்றத்துக்கு முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



இவரின் தலைமைத்துவத்தின் கீழ், இலங்கையின் முன்னேற்றகரமான வங்கியியல் துறையில் உயர்ந்த நிலைக்கு செல்வதற்கு எதிர்பார்ப்புதுடன், டிஜிட்டல் மயமாக்கல் யுகத்தில், புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மூலோபாயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அடையாளமாகத் திகழ்கின்றது.

இதுதொடர்பில் ரொட்ரிகோ கருத்துத் தெரிவிக்கையில்,

“வங்கியியல் புத்தாக்கம் மற்றும் சேவைச் சிறப்பு ஆகியவற்றில் முன்னிலையில் திகழ்வதற்கு யூனியன் வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது. எமது மூலதன வலிமையை பயன்படுத்தி, வளர்ச்சியை எய்துவதுடன், நுகர்வோர் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை துறைகளுக்கு எமது பிரசன்னத்தை மேம்படுத்துவது போன்றவற்றில் நாம் அதிகளவு கவனம் செலுத்துவோம்.

நாடு முழுவதிலும் காணப்படும் எமது கிளை வலையமைப்பினூடாக நாம் உச்ச பயனைப் பெற்று, எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் எமது டிஜிட்டல் ஆற்றல்களை மாற்றியமைக்கவும் எதிர்பார்க்கின்றோம். யூனியன் வங்கி சமூக தொழில்முயற்சியாண்மை பாடசாலை என்பதனூடாக, நிலைபேறான தொழில்முயற்சியாண்மையை கட்டியெழுப்புவதற்கு யூனியன் வங்கி எதிர்பார்க்கின்றது. நேபாள கோடீஸ்வரரான கலாநிதி. பினோத் சௌத்ரி அவர்களின் வழிகாட்டலில் இயங்கும், யூனியன் வங்கியின் பிரதான பங்காளரான CG Corp Global குரூப்பின் நோக்கத்துடன் பொருந்தியதாக வங்கியின் மூலோபாய முன்னுரிமைகள் அமைந்திருக்கும்.

இலங்கையின் பொருளாதாரம் அண்மைக் காலத்தில் உறுதித் தன்மையை எய்தி வருகின்றமையானது, யூனியன் வங்கிக்கு அதன் வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்தி பொருளாதாரம், பெறுமதி சேர் ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்தல் போன்றவற்றை வலிமைப் படுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.” – என்றார்.

யூனியன் வங்கியின் புதிய பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரொட்ரிகோவை வரவேற்று வங்கியின் தவிசாளர் திரு. நிர்வாணா சௌத்ரி கருத்துத் தெரிவிக்கையில்,

“அடுத்த 3 – 5 வருட காலப்பகுதியினுள் இலங்கையின் சிறந்த ஐந்து வங்கிகளில் ஒன்றாக யூனியன் வங்கியை தரமுயர்த்துவதற்கு சிறந்த வகையில் பொருத்தமானதாக தில்ஷானின் அனுபவம் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்புக்கான அர்ப்பணிப்பு போன்றன அமைந்துள்ளன.

பங்குதாரர்களுக்கு பெறுமதி சேர்ப்பது மற்றும் எமது மூலோபாய இலக்குகளை பூர்த்தி செய்வது போன்றவற்றில் அவர்களின் தலைமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும்.”– என்றார்.

# மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் செலான் வங்கி முக்கிய மைல்கல்லை எட்டுகிறது

( B2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதும் 330,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை சென்றடைந்து அவர்களின் வாழ்வில் சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகள் உட்பட இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் இந்தத் திட்டமானது பரவியுள்ளது. இது நாடு முழுவதும் பரந்த வியாபிதத்துள்ளதால் மாணவர்களுக்கு இந்த மதிப்புமிக்க வளங்களை அணுகுவதை உறுதி செய்கிறது.” – என்றார்.








# மொரட்டுவ பல்கலையுடன் யூனியன் வங்கி கைகோர்ப்பு




தேசிய தொழில்முயற்சியாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை (NEDP) முன்னெடுப்பதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் தேசிய புத்தாக்க முகவர் அமைப்பு ஆகியவற்றுடன் யூனியன் வங்கி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

அதனூடாக, இலங்கையின் தொழில் முயற்சியாளர்களாக திகழும் நோக்கில் செயலாற்றும், சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகள் மற்றும் இளைஞர்களுக்கு வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

யூனியன் வங்கியின் தவிசாளர் நிர்வாணா சௌத்ரி, பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி தில்ஷான் ரொட்ரிகோ மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சார்பாக உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர். என். டி. குணவர்தன ஆகியோரின் முன்னிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

சமூக தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வசதிகளுக்கு அத்தியாவசிய அணுகலை வழங்கி, கட்டியெழுப்பல், ஆதரவளித்தல் மற்றும் ஊக்குவிக்கும், யூனியன் வங்கியின் சமூக தொழில்முயற்சியாண்மை பாடசாலையின் நோக்கத்துடன் பொருந்தும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

இந்த மூலோபாய பங்காண்மை என்பது, நேபாளத்தின் மாபெரும் தனியார் வணிக வங்கியான CG Corp Global Group இன் நபில் வங்கியின் புகழ்பெற்ற தொழில்முயற்சியாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டமான NabilSSE இன் எதிர்பார்ப்புகளுக்கமைவானதாக அமைந்துள்ளது. யூனியன் வங்கியின் பிரதான பங்குதாரராக CG Corp Global Group திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

NEDP சான்றிதழ் கற்கையினூடாக, பங்கேற்பவர்களுக்கு தமது சமூக நிறுவனங்களை அறிமுகம் செய்து கட்டியெழுப்பிக் கொள்வதற்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதாக அமைந்துள்ளது.

இலங்கையின் 18 வயதுக்கு மேற்பட்ட குடியுரிமை பெற்றவர்களுக்கு இந்த திட்டத்தில் பங்கேற்க முடியும். சமூக தொழில்முயற்சியாண்மை சிந்தனைகளை கட்டியெழுப்பி, அதனூடாக மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கும் ஆர்வலர்களுக்கு இந்தத் திட்டம் உகந்ததாக அமைந்திருக்கும். இந்த கற்கைகளை வழங்குவதற்கு மொரட்டுவ பல்கலைக்கழகம் முன்வந்துள்ளதுடன், யூனியன் வங்கி மற்றும் தேசிய புத்தாக்க முகவரமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கும். இந்தப் பங்காண்மையானது, இலங்கையில் தொழில்முயற்சியாண்மை மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான யூனியன் வங்கியின் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

யூனியன் வங்கியின் சந்தைப்படுத்தல் உப தலைவி திஷானி திசாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்தத் திட்டத்தில் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம், தொழில்முயற்சியாண்மையை கட்டியெழுப்புவதில் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியின் பல்வேறு பிரிவுகளுக்கு யூனியன் வங்கி ஆதரவளிக்கும். அதில் தொழிற்பாட்டு செலவுகள், நிபுணர் செலவுகள் மற்றும் வசதிகள் மேம்படுத்தல் போன்றன அடங்கியுள்ளன. மேலும், எமது நாடளாவிய ரீதியில் காணப்படும் கிளை வலையமைப்பினூடாக, நாடு முழுவதையும் சேர்ந்த விண்ணப்பதாரிகளை சென்றடைவதற்கு எதிர்பார்ப்பதுடன், அதனூடாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பரந்த அணுகலை உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்.

மூலோபாய பங்காண்மைகள் மற்றும் பரிபூரண ஆதரவு போன்றவற்றினூடாக, எதிர்கால தொழில்முயற்சியாளர்களின் விருத்திக்கு பங்களிப்பு வழங்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.” – என்றார்.